இப்போதே கொடுத்துத் தீரவேண்டும், ஏன் கொடுக்கக்கூடாது என்று சொல்லக் கூடாது. தலைவருக்கு அந்த உரிமை இருக்கிறது என்று நான் கருது கிறேன். எந்த இடத்திலும் தீர்ப்பைத் தள்ளிவைத்துச் சொல்வதில் தப்பு இல்லை. எனது தீர்ப்பைப் பின்னால்தான் அறிவிக்கமுடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: விளக்கமான தீர்ப்பினை நாளையதினம் அறிவிக்கப் போகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் அன்று நடந்தது ஒழுங்காக நடந்தது, சட்டப்பூர்வமாக நடந்தது என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆதலால் நாங்கள் இந்த மன்றத்திலிருந்து வெளியேறு கிறோம் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் அவர்களது கட்சியினரும் வெளி நடப்புச் செய்தனர்.)

DR. H. V. HANDE : The fact that the Hon. Deputy Speaker is not clear in his mind still and even after such a long discussion the fact that he wants time to decide the issues shows that he is not decided about the matter. The Government and the Deputy Speaker are totally confused about the whole issue. Therefore we walk out.

(Then Dr. Hande, followed by members of his Party walked out of the House).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஜனநாயகக் கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றினார்கள் என்று நான் அவர்களைப் பாராட் டினேன். அவர்கள் இருந்து இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தியிருப் பார்களேயானால் என்னுடைய பாராட்டு முழுமை பெற்றிருக்கும். ஆனால் அவர்கள் எப்படியும் வெளி நடப்புச் செய்யவேண்டும் என்பதற்காகத் தாங்கள் தீர்ப்பின் விவரங்களை பிறகு நாளை அல்லது நாளைக்கு மறுநாள் தெரிவிக் கிறேன் என்று கூறியிருந்தும்கூட அவர்கள் தங்கள் தீர்ப்பை எதிர்த்து, இப் போது அளிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து வெளிநடப்புச் செய்ததற்காக எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அரசினர் சட்டமுன்வடிவு

தமிழ்நாடு, 1972-ம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1972-ம் ஆண்டு, மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—(தொடர்ச்சி).

திரு. வி. கே. இராஜா பிள்ளை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1971-72-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் நடைபெறும் விவாதத்தில் பங்குகொண்டு எனது கருத்துக்கள் சிலவற்றையும் கூற நான் விழைகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது மாநிலம் எவ்வளவோ முன்னேறியிருக்கிறது என்பது இந்த நிதி நிலை அறிக்கையிலிருந்தும், மற்றுமுள்ள புள்ளிவிவரங்களிலிருந்தும் நமக்குத் தெள்ளத்தெளிவாக தெரிகிறது. ஆயினும்கூட ஒரு சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் நாம் மின்சாரத்தை நகரங்களுக்கும், கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் நீட்டிக்கொடுக்கும்போது, அவர்கள் மின்சாரத்தை நீட்டிக் கொடுக்கவில்லை கம்பி நீட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இதனைப் பார்க்கும்போது, அந்தத் தலைவர்களும், அல்லது அவர்களது சிஷ்யர்களும் நேற்றும் இன்றும் கம்பி நீட்டிக்கொண்டு திரிந்து கொண்டிருப்பது போல், அவர்களது குறிக்கோளும் இருக்கிறது என்று சொல்வதில் வியப்பில்லை. ஆனால் உண்மையைப் பார்க்கிறபோது, 1967-க்குப் பின்பு வந்த கழக ஆட்சி, 1966 மார்ச்சில் 1,370 மெகாவாட் மின உற்பத்தி இருந்ததை, 1972 மார்ச்சில் சுமார் 2,075 மெகாவாட் மின் உற்பத்திக்கு உயர்த்தியிருக்கிறது என்பதையெல்லாம் பார்க்கிறபோது, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நமது மாநிலம் கழக ஆட்சி வந்த பிறகுதான் மிகவும் முன்னேறி இருக்கிற நிலைமையில் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.